தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**09.12.2012 P.M**

**10.12.2012 A.M**

## எஃப்டிஐ : விவசாயிகளுக்கு பயனில்லை

அன்னிய நேரடி முதலீட்டினால் (எஃப்டிஐ), விவசாயிகள் மற்றும் சிறுவணிகர்களுக்குப் பயனில்லை என்று பாஜக மூத்த தலைவர் முரளி மனோகர் ஜோஷி தெரிவித்தார்.

எஃப்டிஐ-யானது 5 நாடுகளில் தோல்வியைத் தழுவியுள்ளதாக ஊழலுக்கெதிரான சர்வதேச அமைப்பின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பாக அவர் சனிக்கிழமை மேலும் கூறியதாவது:

மத்தியில் 2014ஆம் ஆண்டு பாஜக தலைமையிலான கூட்டணி ஆட்சிக்கு வந்தால், எஃப்டிஐ-க்கான அனுமதி முடிவு ரத்து செய்யப்படும். இந்தியாவில் வால்மார்ட் கால்பதிக்க கோடிக்கணக்கில் செலவு செய்துள்ளதாக அந்நிறுவனம் வெளியிட்டுள்ள நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாஜகவின் எதிர்ப்பினால்தான் காப்பீட்டுத்துறையில் அன்னிய நேரடி முதலீடுக்கு அனுமதியளிக்கவில்லை. அன்னிய முதலீட்டினால் பழங்கள் மற்றும் தானியங்கள் ஆகியவற்றின் விற்பனை 40 சதவீதம் அதிகரிக்கும் என்ற அரசின் கூற்று தவறாகும். 5 முதல் 7 சதவீதம் மட்டுமே விற்பனை அதிகரிக்கும் என்று தெரிவித்தார்.

பாஜக கொண்டு வந்த அன்னிய முதலீட்டை எதிர்க்கும் மசோதா மக்களவையிலும், மாநிலங்களவையிலும் தோல்வியடைந்தது குறித்து செய்தியாளர்கள் கேட்டதற்கு, "இரு அவைகளிலும் பாஜகவுக்கு ஆதரவு தருவதாக உறுப்பினர்கள் தெரிவித்தனர். ஆனால், சுயலாபத்துக்காக மசோதாவுக்கு ஆதரவு தரவில்லை' என்று தெரிவித்தார்.

09th dec 2012 P.M

## விவசாயிகளுக்கு 11-க்குள் சிட்டா -அடங்கல் வழங்க வேண்டும் : ஆட்சியர்

தமிழக முதல்வரின் சிறப்பு திட்டத்தின் கீழ் பயிர் காப்பீடுத் திட்டத்துக்கு விண்ணப்பிக்க நெல் பயிரிட்டுள்ள அனைத்து விவசாயிகளுக்கும் டிசம்பர் 11-ம் தேதிக்குள் கிராம நிர்வாக

அலுவலர்கள் போர்க்கால அடிப்படையில் சிட்டா-அடங்கல் வழங்க வேண்டும் என கடலூர் மாவட்ட ஆட்சியர் ராஜேந்திரரத்னூ தெரிவித்தார்.

÷போதிய நீர் இன்றி அவதியுறும் காவிரி டெல்டா பகுதி விவசாயிகள் பயிர் இழப்பீடு பெற காப்பீடுத் திட்டங்களுக்கான கட்டணத்தை தமிழக அரசே செலுத்தும் என்றும், பயிர் காப்பீடு திட்டத்தின் மூலம் ஏக்கருக்கு ரூ.8,692 ரூபாயும், மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ஏக்கருக்கு ரூ.5 ஆயிரம் சேர்த்து பயிரிழப்பு இழப்பு ஏற்படும் விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.13,692 வழங்கப்படும் என தமிழக முதல்வர் சிறப்பு திட்டத்தை அறிவித்துள்ளார்.

÷கடலூர் மாவட்டத்தில் டெல்டா கடை, மடைப் பகுதிகளான சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் தாலுக்காக்களில் முதல்வரின் சிறப்பு திட்டத்தின் கீழ் கடன் பெறாத விவசாயிகளுக்கு பயிர்க் காப்பீட்டு செய்வதற்கு விண்ணப்பம் பெறும் பணி வேளாண்துறை அலுவலர்கள் மூலம் நடைபெற்று வருகிறது.

÷பயிர் காப்பீடு விண்ணப்பிக்கும் தேதி டிசம்பர் 15-ம் தேதிக்குள் முடிவடைதால் விண்ணப்பம் பெறும் பணிகள் மாவட்ட நிர்வாகத்தால் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

÷இதை முன்னிட்டு சிதம்பரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் சம்பா சாகுபடி பாதுகாப்பு குறித்த ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் ராஜேந்திர ரத்னூ தலைமையில் சனிக்கிழமை நடைபெற்றது.

÷கூட்டத்தில், ஆட்சியர் ராஜேந்திர ரத்னூ பேசியது: சிதம்பரம் வட்டத்தில் வேளாண்துறையினர் மற்றும் வருவாய்த் துறையினர் இணைந்து போர்க்கால அடிப்படையில் விவசாயிகளுக்கு சிட்டா - அடங்கல் வழங்கி வேளாண் அலுவலர்கள் மூலம் விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து வருகிற டிசம்பர் 11-ம் தேதிக்குள் பெற வேண்டும்.

÷அதன் பின்னர் தமிழக அரசு விவசாயிகள் செலுத்த வேண்டிய பிரீமியம் தொகையை செலுத்தி விண்ணப்பத்தை டிசம்பர் 15-ம் தேதிக்குள் புதுதில்லிக்கு அனுப்ப உள்ளது.

÷சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் டெல்டா தாலுக்காக்களில் விவசாயிகளிடம் பயிர் காப்பீடு விண்ணப்பம் பெறும் பணிகளை மேற்கொள்ள மற்ற தாலுக்காக்களில் இருந்து வேளாண் அலுவலர்கள் கூடுதலாக நியமிக்கப்பட்டு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

÷கிராம நிர்வாக அலுவலர்கள் நெற் பயிரிட்டுள்ள அனைத்து நிலங்களுக்கும் விடுபடாமல் சிட்டா-அடங்கல் வழங்க வேண்டும்.

÷பயிர் காப்பீடு செய்யாத விவசாயிகள் இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பித்து பயன் பெற வேண்டும் என ஆட்சியர் ராஜேந்திரரத்னூ தெரிவித்தார்.

÷கூட்டத்தில், மாவட்ட வருவாய் அதிகாரி கே.ராஜேந்திரன், உதவி ஆட்சியர் எல்.சுப்பிரமணியன், வேளாண் இணை இயக்குநர் ராதாகிருஷ்ணன், வட்டாட்சியர் க.தனசிங், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் அசோகன் (வேளாண்), மக்கள்-தொடர்பு அலுவலர் கு.தமிழ்செல்வராஜன் மற்றும் பொதுப்பணித் துறை அதிகாரிகள், வேளாண் உதவி இயக்குநர்கள், வேளாண் அலுவலர்கள், வருவாய் ஆய்வாளர்கள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி மேலாளர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**தண்ணீர் பற்றாக்குறையிலும் நெல்சாகுபடி : ஆட்சியர் யோசனை**

தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால் திருந்திய நெல் சாகுபடி தொழில் நுட்பத்தை பயன்படுத்துமாறு விவசாயிகளை மாவட்ட ஆட்சியர் அன்சுல் மிஸ்ரா கேட்டுக்கொண்டார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கை:

எதிர்பார்த்த அளவில் பருவமழை பெய்யாததாலும், கண்மாய்களில் போதுமான நீர் இருப்பு இல்லாததாலும் சம்பா நடவு செய்வதில் விவசாயிகள் தயக்கம் காட்டி வருகின்றனர். இருக்கின்ற நீரை சிக்கனமாகப் பயன்படுத்தி திருந்திய நெல்நடவு முறையை விவசாயிகள் பின்பற்றினால் பயன் பெறமுடியும். இந்த முறையில், 10 நாள் வயது கொண்ட நாற்றுகளை நடுவது வழக்கம்.

ஏற்கெனவே, சாகுபடி தாமதமாகி விட்ட சூழலில், புதிதாக நாற்றுவிடுவது சிரமம் என்பதால் விவசாயிகள் ஏற்கெனவே வைத்துள்ள 25 நாள்கள் கொண்ட நாற்றுகளையும் நடலாம். ஆனால், சதுரமுறையில் அதிக இடைவெளிவிட்டு நடவு செய்தல், கோனோ வீடர் அல்லது பவர் வீடர் கருவி கொண்டு களை எடுத்தல், குறைவான உயரத்திற்கு நீர் கட்டுதல் ஆகிய தொழில்நுட்பங்களை விவசாயிகள் கடைப்பிடிக்க வேண்டியது அவசியம்.

சதுர முறையில் நடவு செய்ய ஆட்கள் கிடைக்கவில்லை என்றால், வரிசை முறையிலாவது நடவேண்டும். இதற்கு தனியார் மற்றும் தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களில் உள்ள நடவு எந்திரங்களை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

களையெடுப்பதற்கு பவர்வீடர்களை உபயோகிப்பதே சிறந்தது. இக்கருவிகள் தேவையான அளவில் வாடகைக்கு கிடைக்க வேளாண் கூட்டுறவு சங்கங்கள் மூலம் வாடகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

வேளாண் துறையினரை தொடர்பு கொண்டு தகுந்த ஆலோசனைகளைப் பெறலாம் என ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

**ஓமனில் தடை : குறைந்தது முட்டை ஏற்றுமதி !**

இந்திய கோழி முட்டைகள் இறக்குமதிக்கு ஓமன் நாட்டில் கடந்த நவம்பர் மாதம் விதிக்கப்பட்ட தடையால், நாமக்கல் முட்டை ஏற்றுமதி மீண்டும் குறைந்துள்ளது.

வட மாநிலங்களில் ஏற்பட்ட பறவைக் காய்ச்சல் பீதியை அடுத்து, இந்திய கோழி முட்டைகளுக்கு கடந்த மார்ச் மாதம் முதல் ஓமன் நாட்டில் தடை விதிக்கப்பட்டிருந்தது. இதனால், நாமக்கல் மண்டலத்தில் இருந்து மாதம் 5.50 கோடி முதல் 7.22 கோடி வரை ஏற்றுமதியான கோழி முட்டைகள், செப்டம்பர் மாதம் 4.15 கோடியாகக் குறைந்தது.

இதையடுத்து, பண்ணையாளர்கள் விடுத்த கோரிக்கையை ஏற்று, மத்திய அரசு மேற்கொண்ட முயற்சியால் ஓமனில் விதிக்கப்பட்டிருந்த இந்தத் தடை கடந்த செப்டம்பர் 19-ஆம் தேதி விலக்கிக் கொள்ளப்பட்டது. இதைத் தொடர்ந்து, அக்டோபர் மாத இறுதி வரை அந்த நாட்டுக்கு தினமும் 2 கண்டெய்னர்கள் வீதம் நாளொன்றுக்கு சுமார் 9.50 லட்சம் கோழி முட்டைகள் அனுப்பப்பட்டன. அக்டோபர் மாதத்தில் மட்டும் சுமார் 2 கோடிக்கும் அதிகமான முட்டைகள் ஓமனுக்கு அனுப்பப்பட்டதாக முட்டை ஏற்றுமதியாளர்கள் தெரிவித்தனர். இதனால், நாமக்கல் மண்டல முட்டை ஏற்றுமதி கடந்த அக்டோபர் மாதம் மட்டும் 8.27 கோடியை எட்டியது.

இந்த நிலையில், பெங்களூர் அருகே ஏற்பட்ட பறவைக் காய்ச்சல் பாதிப்பை அடுத்து, கடந்த நவம்பர் மாத தொடக்கத்திலேயே இந்திய கோழி முட்டைகளுக்கு ஓமன் நாட்டில் மீண்டும் தடை விதிக்கப்பட்டது.

இந்தத் தடை விதிப்புக்கு முன்பே உலக சுகாதார அமைப்பில் இடம்பெற்றுள்ள நாடுகளுக்கு இந்தியாவில் இருந்து ஏற்றுமதியாகும் கோழி முட்டைகள், இறைச்சிக்கு மத்திய கால்நடை பராமரிப்புத் துறையின் உத்தரவின்படி அக்டோபர் 26-ம் தேதி முதலே கால்நடை தொற்று நீக்கி சான்றளிப்பது நிறுத்தப்பட்டதால் கோழி முட்டை ஏற்றுமதி நிறுத்தப்பட்டது. ஓமன் நாடு விதித்த தடையால், நாமக்கல் மண்டல முட்டை ஏற்றுமதி நவம்பர் மாதத்தில் மட்டும் 7.36 கோடியாகக் குறைந்தது. ஓமனில் தடை தொடர்ந்து நீடித்தால் டிசம்பர் மாதத்திலும் முட்டை ஏற்றுமதி மேலும் பாதிப்புக்குள்ளாகும் என்று பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

இதுகுறித்து கால்நடை மற்றும் விவசாயப் பொருள்கள் வர்த்தக சங்க (எல்ஐஎஃப்டி) பொதுச் செயலர் பி.வி.செந்தில் கூறியது:

சர்வதேச விதிப்படி 90 நாள்களுக்குப் பிறகு குறிப்பிட்ட நோய்த் தொற்று இல்லாதபட்சத்திலேயே தடையை விலக்கிக் கொள்ள வலியுறுத்த முடியும். ஓமனில் நவம்பர் தொடக்கத்திலேயே தடை விதிக்கப்பட்டுள்ளதால் ஜனவரி மாதம் வரை காத்திருக்க வேண்டியுள்ளது. ஓமன் நாடு விதித்த தடையை விலக்கவும், புதிய நாடுகளில் ஏற்றுமதியை விரிவுபடுத்தவும் மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கிறிஸ்துமஸ், புது வருடப் பிறப்பு உள்ளிட்ட பண்டிகைகளை முன்னிட்டு, எப்போதும் டிசம்பர் மாதத்தில் உச்சத்தில் இருக்கும் முட்டை விலை இந்த ஆண்டு ரூ.2.80-ஆகக் குறைந்துள்ளது. இது பண்ணையாளர்களுக்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தி வருகிறது என்றார் அவர்.

## தக்காளியில் காய்ப்புழு தாக்கத்தை கட்டுப்படுத்த ஊடுபயிராக சாமந்தி நடவு : வானிலை ஆய்வு மையம் யோசனை

சாகுபடி செய்யப்பட தக்காளியில் காணப்படும் காய்ப்புழு தாக்கத்தை கட்டுப்படுத்த, ஊடுபயிராக துளுக்க சாமந்திச் செடியை நடவு செய்திட வேண்டும் என்று நாமக்கல் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நாமக்கல் மாவட்ட வானிலையில் வரும் 4 நாள்களுக்கு (டிச.8 முதல் டிச.11 வரை) லேசான மேகமூட்டத்துடன் மழையின்றி காணப்படும். காற்றின் திசை வேகம் மணிக்கு 3 கிமீ முதல் 4 கிமீ வரை கிழக்கிலிருந்து வீசக்கூடும்.

கோழிப் பண்ணையாளர்களுக்கு:

லேசான மேகமூட்டமும், மழையற்ற தன்மையும் நிலுவுவதால் அதிகாலையில் மீண்டும் பனிமூட்டமும், இரவில் வெப்ப அளவுகள் குறைந்தும் காணப்படும். இதனால், கோழிகளில் தீவன எடுப்பு அதிகரிக்க வாய்ப்புள்ளது. எனவே, தீவனத்தின் எரிசக்தி அளவை அதிகரித்து தீவனம் தயார் செய்திட வேண்டும். கோழியின நோய் ஆய்வகத்தில் கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் கோழிகள் பெரும்பாலும் குடல்புண், மேல்மூச்சுக் குழாய் அயற்சி, ஈரல் அயற்சி ஆகியவற்றால் இறந்திருப்பது தெரியவந்துள்ளது. தீவன மூலப்பொருள்களில் கிளாஸ்ட்ரிடியம் மற்றும் ஈகோலை கிருமிகள் கலந்திருப்பது ஆய்வக பரிசோதனையில் தெரியவந்துள்ளது. எனவே, பண்ணையாளர்கள் தகுந்த உயிர்ப் பாதுகாப்பு முறைகளை மேற்கொள்ளவும், தரமான தீவன மூலப்பொருள்களை உபயோகிக்கவும் வேண்டும்.

வேளாண் விவசாயிகளுக்கு:

தற்போது நெல்லில் அதிகமாக காணப்படும் இலைச் சுருட்டுப் புழுக்களின் தாக்கத்தை கட்டுப்படுத்த குளோர்பைரிஃபாஸ் அல்லது பிரெஸினோஃபாஸ் ஆகிய பூச்சிக் கொல்லி மருந்துகளை தெளிக்க வேண்டும்.

சாகுபடி செய்யப்பட உள்ள தக்காளியில் காணப்படும் காய்ப்புழுவின் தாக்குதலைக் கட்டுப்படுத்த 16 வரிசைக்கு ஒரு வரிசை என்ற அளவில் துளுக்க சாமந்தி செடியை நடவு செய்திட வேண்டும். இதனால், காய்ப்புழுவின் தாக்குதல் துளுக்க சாமந்திப் பயிருக்கு மாறி தக்காளியில் இதன் தாக்குதல் இருக்காது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 80,000 விவசாயிகளுக்கு இலவச பயிர் காப்பீட்டுத் திட்டம்

தஞ்சாவூர் மாவட்டத்தில் இலவச பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் 80,000 கடன் பெறாத விவசாயிகள் பயன் பெற வாய்ப்புள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர் கா. பாஸ்கரன்.

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரகத்தில் சனிக்கிழமை நடைபெற்ற தமிழக அரசின் இலவச பயிர் காப்பீட்டுத் திட்டம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுடனான ஆலோசனைக் கூட்டத்தில் அவர் மேலும் பேசியது:

புயல், வெள்ளம், வறட்சி போன்ற இயற்கை பாதிப்பு காரணமாக பயிர் மகசூலில் இழப்பு ஏற்படும்போது அதை ஈடு செய்யும் வகையில் விவசாயிகளுக்கு உதவி செய்வதற்காகத் தேசிய வேளாண் காப்பீட்டு நிறுவனம் செயல்பட்டு வருகிறது.

இப்போது, காவிரி டெல்டா மாவட்டங்களில் நிலவும் அசாதாரண சூழ்நிலையில் நெல் சாகுபடி செய்துள்ள விவசாயிகளின் துயரை துடைப்பதற்காகப் பயிர் காப்பீட்டுக்குச் செலுத்த வேண்டிய பிரிமியத் தொகையை அரசே செலுத்தும் திட்டத்தை தமிழக முதல்வர் அறிவித்துள்ளார்.

நெல் பயிரில் இழப்பு ஏற்படும் போது தேசிய பயிர் காப்பீட்டு நிறுவனம் வழங்கும் இழப்பீட்டுத் தொகையை ஏக்கருக்கு ரூ. 8,692 வரையிலும், தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூ. 5,000-மும் சேர்த்து மொத்தம் ஏக்கருக்கு ரூ. 13,692 வரை பெற முடியும். இதற்காக விவசாயிகள் செலுத்த வேண்டிய பிரிமியத் தொகையான ஏக்கருக்கு ரூ. 174-ஐ அரசே செலுத்தும். மேலும், விவசாயி தான் சாகுபடி செய்துள்ள பரப்பு முழுமைக்கும் உரிய பிரிமிய தொகையை அரசே செலுத்திவிடும்.

அரசே செலுத்தும் பிரிமிய காப்பீட்டுத் திட்டத்தில் விவசாயிகள் பதிவு செய்ய கடைசி நாள் டிச. 15-ம் தேதி. எனவே, நெல் சாகுபடி செய்துள்ள தஞ்சை மாவட்ட விவசாயிகள் அனைவரும்

உடனடியாக தங்களுடைய பகுதியில் உள்ள தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கத்தை அணுகி உடன் பதிவு செய்து பயன் பெறலாம்.

சாகுபடி பரப்புக்கான சான்றுகள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் வழங்கவும் மாவட்ட நிர்வாகம் ஏற்பாடு செய்துள்ளது. இந்தத் திட்டத்தில் மாவட்டத்தில் 80,000 விவசாயிகள் பயன் பெற வாய்ப்புள்ளது. இந்த வாய்ப்பை தஞ்சை மாவட்ட விவசாயிகள் பயன்படுத்தி பதிவு செய்து பயன் பெற வேண்டும்.

இது தொடர்பாக விவசாயிகள் விழிப்புணர்வு ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், இந்தத் திட்டம் குறித்து ஊராட்சிகளில் பதாகைகள் அமைக்கப்படவுள்ளன. தவிர சுவரொட்டிகள் ஒட்டி, துண்டறிக்கைகளும் விநியோகம் செய்யப்படவுள்ளன.

ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் அந்தந்த ஒன்றியங்களில் ஊராட்சி மன்றத் தலைவர்களை அழைத்து கூட்டம் நடத்தி விழிப்புணர்வு ஏற்படுத்துவர் என்றார் பாஸ்கரன். மாவட்ட வருவாய் அலுவலர் சீ. சுரேஷ்குமார், மாவட்ட ஊராட்சித் தலைவர் அமுதாராணி ரவிச்சந்திரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தினமலர்

10.12.2012 A.M

## டெல்டா ' விவசாயிக்கு பயிர் காப்பீடு திட்டப்பயன் :கலெக்டர் ஆலோசனை

தஞ்சாவூர்: அனைத்து விவசாயிகளுக்கும் பயனளிக்கும் வகையில், பயிர் காப்பீடு திட்டத்தை செயல்படுத்துவது குறித்த ஆலோசனைக்கூட்டம் தஞ்சையில் நடந்தது.டெல்டா மாவட்டம் தஞ்சையில், பாகுபாடின்றி அனைத்து விவசாயிகளுக்கும் பயனளிக்கும் வகையில், பயிர் காப்பீடு திட்டத்தை செயல்படுத்துவது குறித்து, தஞ்சை கலெக்டர் பாஸ்கரன் தலைமையில் ஆலோசனைக்கூட்டம் நடந்தது. இதில், டி.ஆர்.ஓ., சுரேஷ்குமார், மாவட்ட பஞ்., தலைவர் அமுதா, வேளாண்துறை இணை இயக்குனர் முகமது யாகியா உள்பட அலுவலர்கள் பங்கேற்றனர்.கூட்டத்தில் கலெக்டர் பாஸ்கரன் பேசியதாவது: நெற்பயிரில் இழப்பு ஏற்படும் சமயங்களில் விவசாயிகள் நலன்காக்க, தேசிய பயிர் காப்பீடு நிறுவனம் இழப்பீட்டு தொகையை வழங்கி வருகிறது. இதன்படி, ஏக்கருக்கு 8,692 ரூபாய் மற்றும் தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து, 5,000 ரூபாய் என, மொத்தம் ஏக்கருக்கு, 13 ஆயிரத்து, 692 ரூபாய் உதவித்தொகை கிடைக்கும்.இதற்காக ஏக்கருக்கு பிரிமீயத்தொகை, 174 ரூபாயை அரசே செலுத்தி விடும். இந்த காப்பீட்டு திட்டத்தை முதல்வர் அறிவித்துள்ளார். இத்திட்டம் குறித்தும், பயன்கள் குறித்தும் அனைத்து விவசாயிகளிடமும் அலுவலர்கள் விரிவாக எடுத்து செல்ல வேண்டும். இதற்கான பணிகளை போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை மேற்கொண்டு, திட்டத்தின் முழு பயனும் பயனாளிகளுக்கு சென்றடைய வழிவகை காண வேண்டும்காப்பீட்டு திட்டத்தில் பதிவு செய்ய வரும், 15ம் தேதி கடைசி தேதியாகும். எனவே, விவசாயிகள் அருகிலுள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளை அணுகி, பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். இத்திட்டத்தில் அனைத்து விவசாயிகளுக்கும் பாகுபாடின்றி பயன்கள் சென்றடைய அதிகாரிகள் முழுவீச்சில் பணியாற்ற வேண்டும்.இவ்வாறு கலெக்டர் பேசினார்.

## தென்னை நாரிலிருந்து கயிறு நேரிடையாக விற்க ஏற்பாடு

திண்டுக்கல்: சாணார்பட்டி, கணவாய்பட்டி, ஒத்தக்கடை, கோட்டை நாயக்கன்பட்டிகளில் தென்னை நாரிலிருந்து கயிறு உற்பத்தி செய்யும் தொழிலை மகளிர் சுய உதவி குழுவினர் செய்து வருகின்றனர். தென்னை, கயிறு வாரியத்தினரின் ஆலோசனைபடி இவற்றை நேரிடையாக வியாபாரிகளிடம் விற்பனை செய்வதற்கான வாய்ப்பு, மாவட்ட நிர்வாகத்தால் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டுள்ளது. கலெக்டர் வெங்கடாசலம் கூறுகையில், ""கூடுதல்

தொழிற்பயிற்சியின் மூலம் அதிக லாபத்தை சம்பாதிப்பதற்கான வாய்ப்புகள் மகளிர் சுய உதவி குழுவினருக்கு ஏற்படுத்தி தரப்படும்," என்றார்.

**மாங்காய் விலை வீழ்ச்சி : கவலையில் விவசாயிகள்**

ஸ்ரீவில்லிபுத்தூர்: ஸ்ரீவில்லிபுத்தூர் செண்பகதோப்பு பகுதி மா மரங்களில், தேன் பூச்சி தாக்குதலால், காய்களுக்கு விலையின்றி, விவசாயிகள் பாதிக்கின்றனர். ஸ்ரீவில்லிபுத்தூர், மம்சாபுரம், செண்பகதோப்பு பகுதிகளில், 200க்கு அதிகமான ஏக்கர்களில், மா மரங்கள் உள்ளன. இங்கு விளையும் மாம்பழங்கள், கேரளா உட்பட பல இடங்களுக்கும் அனுப்பபடுகிறது. தற்போது தேன் பூச்சி தாக்குதல் அதிகரிப்பால், சில மரங்களில் மட்டுமே, மாங்காய் விளைந்துள்ளது. மாங்காய்களில் கருப்பு நிற புள்ளிகள் உள்ளன. இதனால் விலையின்றி,விவசாயிகள் பாதிக்கின்றனர்.விவசாயி கந்தையா,""கோடைகாய் சில மரங்களில் தான் காய்க்கும். தேன் பூச்சி தாக்குதலால், இலைகள் காய்ந்து, காய்களில் கருப்பு நிறம் படிந்து இருக்கும். கிலோ 40 ரூபாய் விலை போகும் மாங்காய்,நோய் தாக்குதலால் 10 ரூபாய்க்கு விற்கும் நிலை உள்ளது ," என்றார்.

**விலை உயர்வால் வெங்காயம் சாகுபடி அதிகரிப்பு :**

கோபிசெட்டிபாளையம்வெங்காயம் விலை கிலோ, 60 ரூபாயாக உயர்ந்துள்ளதால் கொங்கர்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் வெங்காய சாகுபடியை விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.கோபியை அடுத்த குண்டேரிப்பள்ளம் அணை மூலம் கொங்கர்பாளையம், வாணிப்புத்தூர் மற்றும் விநோபா நகர் பகுதியில், 2,500 ஏக்கர் நிலங்கள் பாசன வசதியை பெறுகிறது. கொங்கர்பாளையம் பகுதியில் அதிகப்பட்சமாக சின்ன வெங்காயம் ஆண்டுதோறும் பயிரிடப்படுகிறது. அந்தியூர், சத்தி, தாளவாடி, பொள்ளாச்சி, கோபி, திருப்பூர் மற்றும் கோவை உள்ளிட்ட பகுதிகளுக்கு கொங்கர்பாளையம் பகுதியில் இருந்து சின்ன வெங்காயம் அனுப்பபடுகிறது.நடப்பாண்டு குண்டேரிப்பள்ளம் அணையில் போதிய தண்ணீர் இல்லாததால், கொங்கர்பாளையம் உள்ளிட்ட பகுதிளில் நிலத்தடி நீரும் வற்றியது. இதனால் கிணறுகளில் தண்ணீர் இல்லாத நிலையில் சின்ன வெங்காய சாகுபடி குறைந்தது.வடகிழக்கு பருவமழையால் குன்றி மலைப்பகுதியில் பலத்த மழை பெய்ததால், குண்டேரிப்பள்ளம் அணையின் நீர்மட்டம், 20 அடி வரை உயர்ந்துள்ளது. அணையை சுற்றியுள்ள இருந்த தரிசு நிலங்கள் எல்லாம், விவசாய நிலங்களாக புத்துயிர் பெற்று வருகிறது. குறிப்பாக சின்ன வெங்காய சாகுபடிக்கான பணிகளை விவசாயிகள் முழுவீச்சில் தொடங்கியுள்ளனர்.சின்ன வெங்காயத்தின் விலை மொத்த விற்பனையில் ஒரு கிலோ, 40 ரூபாய் வரையும், சில்லரை விற்பனையில், 60 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது. சின்ன வெங்காயத்தின் விலை உயர்ந்து காணப்படுவதால் கோபி சுற்று வட்டாரத்தில் சின்ன வெங்காயம் பயிரிட்டுள்ள விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## சிவப்பு வெண்டைக்கு மக்கள் மத்தியில் மவுசு

பள்ளிபாளையம்: பள்ளிபாளையம் சுற்றுவட்டார கிராமப் புறங்களில், சிவப்பு வெண்டைக் காய்க்கு, மக்கள் மத்தியில் வரவேற்பு அதிகரித்து வருகிறது. அதனால், அவற்றை விவசாயிகள் ஆர்வமுடன் பயிரிட்டு வருகின்றனர்.பள்ளிபாளையம் அதன் சுற்றுவட்டாரத்தில், விவசாயம் பிரதான தொழிலாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நெல், வாழை போன்றவை பிரதான பயிர்களாகும். சில ஆண்டுகளாக, குறுகிய காலத்தில் கணிசமான லாபம் தரும் காய்கறி செடிகளை விளைவிப்பதில், பள்ளிபாளையம் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.அந்த வகையில், வெண்டை சாகுபடியை, விவசாயிகள் அதிகளவு மேற்கொள்கின்றனர். குறிப்பாக, சிவப்பு நிறத்தில் விளைவிக்கப்படும் வெண்டைக்காய் சுவை மிகுந்திருப்பதால், மக்கள் மத்தியில், பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.இதுகுறித்து, வெண்டை விவசாயி ஒருவர் கூறியதாவது:சிவப்பு நிறத்தில் விளைவிக்கப்படும் வெண்டைக்காயை, மக்கள் அதிகம் வாங்கிச் செல்கின்றனர். அதனால், சிவப்பு வெண்டையின் விலையும் சற்று அதிகமாக உளளது.ஒரு கிலோ சிவப்பு வெண்டை, 50 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. மற்ற காய்களைக் காட்டிலும், சிவப்பு வெண்டைக்கு வரவேற்பு உள்ளதால், அவற்றை சுற்றுவட்டார கிராம விவசாயிகள் ஆர்வமுடன் பயிரிட்டு வருகிறோம். இவ்வாறு கூறினார்.

## பட்டறிவு பயிற்சி முகாம் :50 விவசாயிகள் பங்கேற்பு

தா.பேட்டை: வட்டார வேளாண்மை விரிவாக்க மையம் அட்மா திட்டம் கீழ், வெளிமாவட்ட அளவிலான பட்டறிவு பயண பயிற்சிக்காக விவசாயிகள் அழைத்து செல்லப்பட்டனர்.தா.பேட்டை பகுதியைச் சேர்ந்த, 50 பேர் கொண்ட விவசாய குழுவினர், நாமக்கல் மாவட்ட கால்நடை மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தை நேரில் சென்று பார்வையிட்டனர். அப்போது பேராசிரியர் ஆனந்தபிரகாஷ் வெள்ளாடு மற்றும் செம்மறியாடு, மாடு, முயல் வளர்ப்பு மற்றும் பராமரிப்பு முறைகள் பற்றியும், பேராசிரியர் ஆனந்தி, நாட்டுக்கோழி, ஜப்பான் காடை மற்றும் வான்கோழி, நெருப்புக்கோழி வளர்ப்பு மற்றும் பராமரிப்பு பற்றியும், உழவியல் துறை பேராசிரியர் ராமகிருஷ்ணன் கால்நடைகளுக்கு தேவையான தீவன வளர்ப்பு முறைகள் பற்றி விவசாயிகளுக்கு விளக்கினார்.விவசாயிகளுடன், தா.பேட்டை வேளாண்மை உதவி இயக்குனர் செல்வம், வட்டார தொழில்நுட்ப மேலாளர் சுகுந்தா, வட்டார தொழில்நுட்ப வல்லுனர்கள் பிரசாத், சதீஷ்குமார் உட்பட பலர் உடன் சென்றனர்.

## டிச.,15க்குள் நெல் பயிருக்கு காப்பீடு செய்ய அழைப்பு

பெரம்பலூர்: பெரம்பலூர் மாவட்டத்தில், நெல் சாகுபடி செய்துள்ள விவசாயிகள், டிசம்பர், 15ம் தேதிக்குள் பயிர் காப்பீடு செய்யலாம், என வேளாண்மை துறை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பெரம்பலூர் மாவட்டத்தில் நடப்பு சம்பா பருவத்தில், 5,152 ஹெக்டர் பரப்பளவில் நெல் சாகுபடி

செய்யப்பட்டுள்ளது. போதுமான மழையில்லாத சூழ்நிலையில், விவசாயிகள் தேசிய வேளாண்மை காப்பீடு திட்டத்தில், காப்பீடு செய்து பயன் பெறலாம். வெள்ளம், வறட்சி, பூச்சிகள் மற்றும் நோய்கள் ஆகியவற்றால் ஏற்படும் மகசூல் இழப்புகளுக்கும், மகசூல் குறைபாடு, உத்திரவாத மகசூல், காப்பீடு செய்த தொகை ஆகியவற்றை கணக்கிட்டு, காப்பீட்டு தொகை வழங்கப்படுகிறது.ஒவ்வொரு தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியம், வருவாய் கிராம பகுதிகளில், மாநில அரசின் விவசாய துறையினால் பயிர் அறுவடை காலத்தில், பயிர் அறுவடை சோதனைகள் நடத்தப்பட்டு, பருவத்தின் மகசூலை கடந்த, மூன்று அல்லது ஐந்தாண்டு கால உத்தரவாத மகசூலோடு ஒப்பிடும் போது, நடப்பு பருவத்தின் மகசூல், எவ்வளவு குறைந்து இருக்கிறதோ அந்த விகிதப்படி வட்டாரத்திலுள்ள காப்பீடு செய்த அனைத்து விவசாயிகளுக்கும், தொகைக்கேற்ப நஷ்ட ஈடு வழங்கப்படும்.குத்தகைத்தாரர் உட்பட அனைத்து விவசாயிகளும் இத்திட்டத்தில் சேர்ந்து பயன்பெறலாம். நெல் பயிரிட்டு, கடன் பெற்ற சிறு, குறு விவசாயிகள், ஏக்கருக்கு காப்பீட்டுத் தொகையான, 8,692 ரூபாய்க்கு, 87ம் கடன் பெறாத விவசாயிகள், 78 கூடுதல் காப்பீட்டுத் தொகையான, 7,604க்கு கடன் பெற்ற சிறு, குறு விவசாயிகள், 517ம், கடன் பெறாத சிறு, குறு விவசாயிகள், 465 செலுத்தி, உரிய படிவத்தை வேளாண்மை விரிவாக்க மையம் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி கிளையை அணுகி பயன்பெறலாம்.இத்திட்டத்தில், சேர ஒவ்வொரு விவசாயியும் அவரது பெயரில் வங்கி சேமிப்பு கணக்கு வைத்திருக்க வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வில்லிவலம் வனத்துறை நிலத்தில் தனியார் சவுக்கு சாகுபடி**

காஞ்சிபுரம்:வனத்துறைக்கு சொந்தமான நிலத்தை, சிலர் ஆக்கிரமிப்பு செய்து சவுக்கு மரங்கள் நடவு செய்து வருவதால், அரசுக்கு வருவாய் இழைப்பு
ஏற்பட்டுள்ளது. இதை தடுக்க வேண்டிய, அரசு அதிகாரிகள் மவுனம் காட்டு
வதால், ஆக்கிரமிப்பு, தொடர் கதை
ஆகிவிட்டது.

காஞ்சிபுரத்திலிருந்து, 10 கி.மீ., தொலைவில், வில்லிவலம் ஊராட்சி அமைந்துள்ளது. இந்த ஊராட்சியை ஒட்டி வேகவதியாறு மற்றும் பாலாறு
செல்கிறது.

பாலாற்றையொட்டி ஓடை புறம்போக்கு என, அழைக்கப்படும் புஞ்சை தரிசு நிலங்கள் உள்ளன. இந்த நிலங்களின் பரப்பளவு, 200 க்கு மேற்பட்ட ஏக்கர் என, கூறப்படுகிறது. இந்த புஞ்சை தரிசு நிலம் வருவாய் பதிவேட்டில், பாலாறு ஓடை புறம்போக்கு என, பதிவு செய்யப்பட்டுள்ளது.

வனத்துறை

இந்த பாலாற்று புறம்போக்கு நிலத்தை, கடந்த, 20 ஆண்டுகளுக்கு முன், 200 ஏக்கர் நிலத்தை வனத்துறை கையகப்படுத்தியது.

இதை, கிராம வருவாய் கணக்குப் பதிவேட்டில் வனக்காடு என, பத்திரப்பதிவு செய்யப்பட்டுள்ளது. வனத்துறைக்கு சொந்தமான புஞ்சை தரிசு நிலத்தில், வனத்துறையினர் சவுக்கு மரங்கள் வைத்து பராமரித்து வந்தனர்.

இதற்காக, ஒரு வனத்துறையின் மூலம் ஒரு வன பாதுகாவலர் மற்றும் வன அதிகாரி என, இருவரை நியமித்திருந்தனர்.

வருவாய்

வனத்துறைக்கு சொந்தமான நிலத்தில், சவுக்கு மரங்கள் வளர்ச்சியடைந்தன. இந்த சவுக்கு மரங்களின் மூலம், ஏழு ஆண்டுகளுக்கு பின், 25 லட்சம் ரூபாய் வரையில் வருவாயை ஈட்டி வந்தனர். இந்த வருவாய் வனத்துறைக்கு

பெரிதும் உதவியாக இருந்து வந்தது.

கபளீகரம்

இந்த வனத்துறைக்கு சொந்தமான நிலத்தை, அப்போதைய வன அதிகாரியாக இருந்த அதிகாரி ஒருவர், கடந்த தி.மு.க., ஆட்சிக் காலத்தில், சிலருக்கு, ஒரு ஏக்கர், 30 ஆயிரத்துக்கு விற்பனை செய்ததாக பொதுமக்கள் கூறுகின்றனர்.

விற்பனை செய்யப்பட்டதாக கூறப்

படும் இடத்தில் தனி நபர்கள் சவுக்கு மரங்கள் நடவு செய்துள்ளனர்.

இதை, தடுக்க வேண்டிய வருவாய்த்துறை அதிகாரிகள், எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதனால், அரசுக்கு சொந்தமான பல ஏக்கர் நிலங்கள் பறிபோய் உள்ளன. மேலும், அரசுக்கு கோடிக்கணக்கான ரூபாய் வருவாய் இழப்பும்

ஏற்பட்டுள்ளது.

இந்த அரசு நிலத்தை மீட்டு தரக்கோரி, வில்லிவலம் ஊராட்சியை சேர்ந்த மகளிர் குழுவினர், மாவட்ட ஆட்சியரிடத்தில் மனு கொடுத்துள்ளனர்.

இந்த மனுவில் கூறியிருப்பதாவது:

வில்லிவலம் ஊராட்சிக்கு சொந்தமான கோயம்பாக்கம் பாலாற்று படுகையில், வனத்துறைக்கு சொந்தமான நிலங்கள், தனியாருக்கு விற்பனை செய்துள்ளனர். இதை தடுக்க வேண்டிய அதிகாரிகள் துணையாக உள்ளனர்.

எனவே, அரசுக்கு சொந்தமான நிலத்தை மீட்டு, தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ், மரக்கன்றுகளை நடவு செய்ய ஆவன செய்ய வேண்டும்.

இவ்வாறு மனுவில் தெரிவித்து

உள்ளனர்.

## மழை பெய்தும் பலனில்லை : அரிசி விலை உயர்வு

திருத்தணி:தொடர்ந்து மழை பெய்தும், மின்வெட்டால் விவசாயிகள் நெற்பயிர் செய்யாமல், மாற்று பயிர் செய்வதால் அரிசியின் விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது.

திருவள்ளூர் மாவட்டத்தில், இரு மாதங்களுக்கு முன்பு "நீலம்' புயலால்

ஒரு வாரம் தொடர்ந்து பலத்த மழை பெய்தது. அதேபோல், நான்கு நாட்களுக்கு முன்பு, வங்கக் கடலில் ஏற்பட்ட தாழ்வு மண்டலத்தால், தொடர்ந்து மூன்று நாட்கள் மழை பெய்தது.

நிலத்தடி நீர் மட்டம் உயர்வு

திருத்தணி தாலுகாவில், மூன்று நாட்களாக பெய்த மழையால், நந்தி, கொற்றலை ஆறுகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. இதனால் விவசாய கிணறுகளில் நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக உயர்ந்து உள்ளது.

ஆனால், விவசாயிகளுக்கு நெற்பயிர் செய்வதில் ஆர்வம் இல்லை. மழை பெய்தும் நெல் பயிர் செய்யாததால், அரிசியின் விலை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

இதுகுறித்து, கே.ஜி. கண்டிகையை சேர்ந்த விவசாயிகள் கூறியதாவது:தற்போது பெய்து உள்ள மழையால் கிணறுகள் நிரம்பி உள்ளன. இந்த தண்ணீரை வைத்து ஆறு மாதம் வரை நெற்பயிர் செய்யலாம். நெற்பயிருக்கு தினமும் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். தற்போது மின்வெட்டால், 24 மணி நேரத்திற்கு, மூன்று மணி நேரம் மட்டுமே மும்முனை மின்சாரம் வழங்குகின்றனர்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.மேலும்,""மும்முனை மின்சாரம் இருந்தால் தான் விவசாய மின் மோட்டார்களை இயக்க முடியும். விவசாயத்திற்கு கூலியாட்கள் கிடைப்பது இல்லை. இதனால், நெற்பயிருக்கு பதில், காய்கறி தோட்டம், வேர்க்கடலை, கரும்பு மற்றும் சவுக்கு ஆகியவை பயிர் செய்கிறோம்,'' என்றனர்.விலை குறைய வாய்ப்பு இல்லைஇதுகுறித்து, பெயர் கூற விரும்பாத அரிசி ஆலை உரிமையாளர் ஒருவர் கூறியதாவது:நாங்கள் திருத்தணி, நாசாகுப்பம், வினாயகபுரம், முருக்கம்பட்டு உள்ளிட்ட பகுதிகளில் உள்ள விவசாயிகளிடம் நெல் வாங்கி அரைத்து, 25 கிலோ மூட்டைகளாக தயார் செய்து விற்கிறோம்.

கடந்த ஆண்டு ஒரு நாளைக்கு, குறைந்த பட்சம், 250 மூட்டை நெல் அரைப்போம். தற்போது, நெல் வரத்து குறைந்து விட்டதாலும், கடும் மின்வெட்டால் தினமும், 50 மூட்டை நெல் தான் அரைவு செய்கிறோம்.

இதனால், அரிசியின் விலை நாளுக்கு நாள் அதிகரிக்கிறது. இனிவரும் மாதங்களிலும் அரிசியின் விலை தொடர்ந்து உயருமே, தவிர குறைவதற்கு வாய்ப்புகள் இல்லை.

இவ்வாறு அவர் கூறினார்.

## நெல் நாற்று நடும் பணி வளத்தி பகுதியில் தீவிரம்

அவலூர்பேட்டை: தேவனூரில் நெல் நாற்று நடவுப்பணிகள் தீவிரமடைந்துள்ளது. வளத்தி பகுதியில் கடந்த சில தினங்களாக நெல் நாற்று நடும் பணி நடந்து வருகிறது. தேவனூருக்கு செல்லும் சாலை அருகில் உள்ள விவசாயிகள் தற்போது புதிய ரக நெல் பயிரிட, நாற்று நடவுப்பணிகளை மேற்கொண்டுள்ளனர். இப்பகுதியில் நடவுப்பணிகள் பல இடங்களிலும் பரவலாக நடப்பதால் விவசாய பணிகள் செய்வதற்கு, ஆட்கள் கிடைப்பதில்லை என விவசாயிகள் தெரிவித்தனர்.

## நெல் அறுவடை இயந்திரங்கள் கர்நாடகா எல்லையில் நிறுத்தம்

மேட்டூர்: தமிழகத்தில் இருந்து, சம்பா அறுவடைக்காக, கர்நாடகா புறப்பட்டுச் சென்ற நெல் அறுவடை இயந்திரங்களை, எல்லையில், போலீஸார் தடுத்து, திருப்பி அனுப்புவதால், உரிமையாளர்கள் விரக்தியில் உள்ளனர்.கர்நாடகா காவிரி கரையோர விவசாயிகள், ஜூலை மாதத்தில், சம்பா சாகுபடி துவங்குவது வழக்கம். சாகுபடி செய்த நெல் ரகங்களை பொருத்து, நவம்பர், டிசம்பர் மாதம் அறுவடை நடக்கும். நடப்பாண்டு காவிரி நீர்பிடிப்பு பகுதியில், தென்மேற்கு பருவமழை தீவிரம் அடைந்ததால், கர்நாடகா அணைகளின் நீர்மட்டம் அதிகரித்தது.அதற்கேற்ப பாசன பகுதிகளுக்கு சாகுபடி முடியும் வரை, அணைகளில் இருந்து நீர் திறக்கப்பட்டது. இதனால், கர்நாடகா காவிரி பாசன பகுதிகளில், சம்பா சாகுபடி நிறைவடைந்துள்ள நிலையில், நெல் அறுவடை செய்வதற்கு கூலியாட்கள் பற்றாக்குறை, அறுவடை இயந்திரங்கள் பற்றாக்குறை நீடிக்கிறது.இதனால், சேலம் மாவட்டம், ஆத்தூர் மற்றும் அதனை சுற்றியுள்ள சின்னசேலம், பெரமனூர், இருளாபுரம் பகுதியில் இருந்து, 500க்கும் மேற்பட்ட நெல் அறுவடை இயந்திரங்கள், மேட்டூர் அடுத்த பாலாறு வழியாக, கர்நாடகாவுக்கு சென்றது.தமிழகத்தில் இருந்து, ஏற்கனவே கொண்டு செல்லப்பட்ட இயந்திரங்கள் மூலம் பத்ராவதி, தாவணகேரே, மை'ரு, சிமோகா, மாண்டியா பகுதிகளில் நெல் அறுவடை செய்யப்படுகிறது.இந்நிலையில், காவிரி நீர் பிரச்னை காரணமாக, இரண்டு நாட்களாக, மேட்டூரில் இருந்து, கர்நாடகா மாநிலம் மாதேஸ்வரன் மலை வரை மட்டுமே, தமிழக அரசு போக்குவரத்து கழக பஸ்கள் இயக்கப்படுகிறது. கொள்ளேகால், மை'ரு பகுதிகளுக்கு பஸ்கள் இயக்கப்படவில்லை. மாதேஸ்வரன் மலையை தாண்டி பஸ்கள், தமிழக வாகனங்கள் செல்ல, கர்நாடகா போலீஸார் தடை விதித்துள்ளனர்.ஆத்தூர், சின்னசேலம் பகுதியில் இருந்து, இரண்டு நாட்களாக மேட்டூர், பாலாறு வழியாக கர்நாடகா புறப்பட்டுச் சென்ற நெல் அறுவடை இயந்திரங்களையும், பாலாறு எல்லையிலேயே, போலீஸார் தடுத்து திருப்பி அனுப்பி விட்டனர்.ஏமாற்றம் அடைந்த உரிமையாளர்கள், பிரச்னை முடிந்ததும், கர்நாடகா செல்வதற்காக, மேட்டூர் முதல் பாலாறு வரை, ஆங்காங்கே அறுவடை இயந்திரங்களை நிறுத்தி வைத்துள்ளனர்.

அறுவடை இயந்திரங்களை பயன்பாடின்றி நிறுத்தி வைத்திருப்பதாலும், வருவாய் இல்லாததாலும், உரிமையாளர்கள் விரக்தியில் உள்ளனர்.

**வரத்து குறைவால் வாழைத்தார் விலைஉயர்வு : விவசாயிகள் மகிழ்ச்சி**

ப.வேலூர்: ப.வேலூர் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில், காவிரி ஆற்றின் கரையோரம், 3,000க்கும் மேற்பட்ட ஏக்கர் பரப்பில், வாழை சாகுபடி செய்யப்பட்டுள்ளது.இங்கு, பூவன், ரஸ்தாளி, கற்பூரவள்ளி, பச்சநாடன், மொந்தன் போன்ற ரகங்கள் சாகுபடி செய்யப்படுகிறது. அறுவடை செய்யப்பட்ட வாழைத்தார்களை, விவசாயிகள், ப.வேலூரில் உள்ள தினசரி மார்க்கெட்டில் கொண்டு வந்து விற்பனை செய்கின்றனர்.நாமக்கல், சேலம், ஈரோடு, கரூர் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த வியாபாரிகள் போட்டி போட்டு ஏலம் எடுத்து, வாழைத்தாரை, லாரிகள் மூலம் பல்வேறு இடங்களுக்கு விற்பனைக்காக அனுப்புகின்றனர்.ஆயுதபூஜை முடிந்த பின், மந்தகதியில் இருந்த ஏலம், தற்போது சூடு பிடித்துள்ளது. தினமும், 1,000க்கும் அதிகமான வாழைத்தார்கள் கொண்டு வந்து ஏலத்தில் விடப்படும். நேற்று வரத்து குறைந்ததால், வாழைத்தார் விலை உயர்ந்தது. அதனால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.கடந்த வாரம், 200 ரூபாய்க்கு ஏலம் போன வாழைத்தார் ஒன்று, நேற்று, 350 ரூபாய்க்கு ஏலம் போனது. 150க்கு விற்பனையான பச்சநாடான், 250க்கும், 150க்கு விலைபோன கற்பூரவள்ளி, 250க்கும், 150க்கு விற்பனையான ரஸ்தாளி, 250க்கும் விலைபோனது.அதேபோல், மூன்று ரூபாய்க்கு விற்பனையான மொந்தன் காய் ஒன்று, நேற்று, நான்கு ரூபாய்க்கு விற்பனையானது. இந்த விலை உயர்வு, விவசாயிகளை மகிழ்ச்சி அடையச் செய்துள்ளது.

**உழவர் பயிற்சி நிலையம் சார்பில்கிராம அடிப்படை பயிற்சி முகாம்**

மோகனூர்: நாமக்கல் உழவர் பயிற்சி நிலையம் வேளாண் துணை இயக்குனர் நடராஜன் அறிவுரைபடி, விவசாயிகளுக்கான கிராம அடிப்படை பயிற்சி முகாம், மோகனூர் யூனியன் சின்னதம்பிபாளையத்தில்,இரண்டு நாட்கள் நடந்தது.குமரிபாளையம் பஞ்சாயத்து தலைவர் ராமலிங்கம் தலைமை வகித்தார். விதைச்சான்று உதவி இயக்குனர் சுப்ரமணியன், விதை உற்பத்தி முறைகள் மற்றும் தரமான விதைகளின் அவசியம் குறித்தும், தோட்டக்கலை துறை மானியத்திட்டங்கள், வாழை சாகுபடி பற்றி தோட்டக்கலை உதவி இயக்குனர் அசோகன் ஆகியோர் விளக்கம் அளித்தனர்.உழவர் பயிற்சி நிலைய வேளாண் அலுவலர் சித்திரைச்செல்வி, உரங்களின் பயன்பாடு மற்றும் மண் வள மேம்பாடு பற்றியும், துணை வேளாண் அலுவலர் மணி, வேளாண் துறையின் மானிய திட்டங்கள் குறித்தும், உதவி வேளாண் அலுவலர் மோகன்ராஜ், எண்ணெய் வித்து சாகுபடி பற்றியும் பேசினர்.உதவி வேளாண் அலுவலர் செந்தில்குமரன், வாழை பழுக்க வைக்கும் நிலையத்தின் செயல்பாடு மற்றும் முறைகள் குறித்தும், பட்டு வளர்ப்பு முறைகள் மற்றும் மானியத் திட்டங்கள் பற்றி, இளநிலை ஆய்வாளர் சக்கரவர்த்தி ஆகியோர் பேசினர்.

கரும்பு கரணை நேர்த்தி மற்றும் நிலக்கடலை விதை நேர்த்தி செயல் விளக்கங்களை முறையே வட்டார அட்மா திட்ட மேலாளர் தனசேகரன், திட்ட வல்லுனர் கார்த்திகேயன் ஆகியோர் பேசினர்.வேளாண் அலுவலர்கள், முன்னோடி விவசாயிகள் உள்பட பலர் பங்கேற்றனர். ஏற்பாடுகளை, உதவி வேளாண் அலுவலர்கள் செய்திருந்தனர்.

## பாசன நீர் சிக்கனம் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி

தர்மபுரி: தர்மபுரி மாவட்ட உழவர் பயிற்சி நிலையம் சார்பில் காரிமங்கலம் யூனியனுக்கு உட்பட்ட எச்சனம்பட்டி, தர்மபுரி யூனியனுக்கு உட்பட்ட சிக்கம்பட்டி, அரூர் யூனியனுக்கு உட்பட்ட அச்சல்ỗடி, பென்னாகரம் யூனியனுக்கு உட்பட்ட புதுச்சாம்பள்ளி ஆகிய கிராமங்களில் விவசாயிகளுக்கு பாசன நீர் சிக்கனம் குறித்த விழிப்புணர்வு பயிற்சி நடந்தது.பயிற்சியை துவக்கி வைத்து, உழவர் பயிற்சி நிலைய வேளாண் துணை இயக்குனர் மேகநாதன் பேசியதாவது:சொட்டு நீர் பாசன முறையை பின்பற்றும் போது, பயிர்களுக்கு தேவையான தண்ணீர் தினமும் சரியான அளவிலும், பரிந்துரைக்கப்படும் பயிர் ஊட்டச்சத்துக்கள் வளர்ச்சி நிலைக்கு ஏற்ப பிரித்தளிக்க முடியும். இதனால் சாகுபடி செய்யப்பட்ட பயிர்கள் யாவும் ஒரே சீராக வளர்ச்சி அடைந்து தரமான மகசூல் கிடைக்கும்.களை வளர்ச்சி கட்டுப்படுத்தப்படுவதால், களைகள் மூலம் வீணாகும் நீர் மற்றும் ஊட்டசத்துக்களின் விரயம் தடுக்கப்பட்டு, பயிருக்கு கிடைக்கும். தற்போது, விவசாய பணிகளில் வேலையாட்கள் தட்டுப்பாடு உள்ள நிலையில், விவசாய பணிகள் காலத்தில் மேற்கொள்ள இயந்திரங்கள் பயன்பாடு மிக முக்கியமாகும்.இயந்திர பயன்பாட்டின் மூலம் பண்ணை பணிகளை உரிய நேரத்தில் முடிக்கவும், விரைவாக முடிக்கவும் முடியும். இதனால், விவசாயிகளுக்கு மகசூல இழப்பு ஏதுமின்றி அதிக வருவாய் ஈட்ட முடியும்.இவ்வாறு பேசினார்.ஏற்பாடுகளை அந்தந்த வட்டார "அட்மா' திட்ட பணியாளர்கள் செய்திருந்தனர்.

## வில்லிவலம் வனத்துறை நிலத்தில் தனியார் சவுக்கு சாகுபடி

காஞ்சிபுரம்:வனத்துறைக்கு சொந்தமான நிலத்தை, சிலர் ஆக்கிரமிப்பு செய்து சவுக்கு மரங்கள் நடவு செய்து வருவதால், அரசுக்கு வருவாய் இழைப்பு
ஏற்பட்டுள்ளது. இதை தடுக்க வேண்டிய, அரசு அதிகாரிகள் மவுனம் காட்டு
வதால், ஆக்கிரமிப்பு, தொடர் கதை
ஆகிவிட்டது.

காஞ்சிபுரத்திலிருந்து, 10 கி.மீ., தொலைவில், வில்லிவலம் ஊராட்சி அமைந்துள்ளது. இந்த ஊராட்சியை ஒட்டி வேகவதியாறு மற்றும் பாலாறு
செல்கிறது.

பாலாற்றையொட்டி ஓடை புறம்போக்கு என, அழைக்கப்படும் புஞ்சை தரிசு நிலங்கள் உள்ளன. இந்த நிலங்களின் பரப்பளவு, 200 க்கு மேற்பட்ட ஏக்கர் என, கூறப்படுகிறது. இந்த புஞ்சை தரிசு நிலம் வருவாய் பதிவேட்டில், பாலாறு ஓடை புறம்போக்கு என, பதிவு செய்யப்பட்டுள்ளது.

வனத்துறை

இந்த பாலாற்று புறம்போக்கு நிலத்தை, கடந்த, 20 ஆண்டுகளுக்கு முன், 200 ஏக்கர் நிலத்தை வனத்துறை கையகப்படுத்தியது.

இதை, கிராம வருவாய் கணக்குப் பதிவேட்டில் வனக்காடு என, பத்திரப்பதிவு செய்யப்பட்டுள்ளது. வனத்துறைக்கு சொந்தமான புஞ்சை தரிசு நிலத்தில், வனத்துறையினர் சவுக்கு மரங்கள் வைத்து பராமரித்து வந்தனர்.

இதற்காக, ஒரு வனத்துறையின் மூலம் ஒரு வன பாதுகாவலர் மற்றும் வன அதிகாரி என, இருவரை நியமித்திருந்தனர்.

வருவாய்

வனத்துறைக்கு சொந்தமான நிலத்தில், சவுக்கு மரங்கள் வளர்ச்சியடைந்தன. இந்த சவுக்கு மரங்களின் மூலம், ஏழு ஆண்டுகளுக்கு பின், 25 லட்சம் ரூபாய் வரையில் வருவாயை ஈட்டி வந்தனர். இந்த வருவாய் வனத்துறைக்கு

பெரிதும் உதவியாக இருந்து வந்தது.

கபளீகரம்

இந்த வனத்துறைக்கு சொந்தமான நிலத்தை, அப்போதைய வன அதிகாரியாக இருந்த அதிகாரி ஒருவர், கடந்த தி.மு.க., ஆட்சிக் காலத்தில், சிலருக்கு, ஒரு ஏக்கர், 30 ஆயிரத்துக்கு விற்பனை செய்ததாக பொதுமக்கள் கூறுகின்றனர்.

விற்பனை செய்யப்பட்டதாக கூறப்

படும் இடத்தில் தனி நபர்கள் சவுக்கு மரங்கள் நடவு செய்துள்ளனர்.

இதை, தடுக்க வேண்டிய வருவாய்த்துறை அதிகாரிகள், எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இதனால், அரசுக்கு சொந்தமான பல ஏக்கர் நிலங்கள் பறிபோய் உள்ளன. மேலும், அரசுக்கு கோடிக்கணக்கான ரூபாய் வருவாய் இழப்பும்

ஏற்பட்டுள்ளது.

இந்த அரசு நிலத்தை மீட்டு தரக்கோரி, வில்லிவலம் ஊராட்சியை சேர்ந்த மகளிர் குழுவினர், மாவட்ட ஆட்சியரிடத்தில் மனு கொடுத்துள்ளனர்.

இந்த மனுவில் கூறியிருப்பதாவது:

வில்லிவலம் ஊராட்சிக்கு சொந்தமான கோயம்பாக்கம் பாலாற்று படுகையில், வனத்துறைக்கு சொந்தமான நிலங்கள், தனியாருக்கு விற்பனை செய்துள்ளனர். இதை தடுக்க வேண்டிய அதிகாரிகள் துணையாக உள்ளனர்.

எனவே, அரசுக்கு சொந்தமான நிலத்தை மீட்டு, தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ், மரக்கன்றுகளை நடவு செய்ய ஆவன செய்ய வேண்டும்.

இவ்வாறு மனுவில் தெரிவித்து

உள்ளனர்.

## மாங்காய் விலை வீழ்ச்சி : கவலையில் விவசாயி கள்

ஸ்ரீவில்லிபுத்தூர்: ஸ்ரீவில்லிபுத்தூர் செண்பகதோப்பு பகுதி மா மரங்களில், தேன் பூச்சி தாக்குதலால், காய்களுக்கு விலையின்றி, விவசாயிகள் பாதிக்கின்றனர். ஸ்ரீவில்லிபுத்தூர், மம்சாபுரம், செண்பகதோப்பு பகுதிகளில், 200க்கு அதிகமான ஏக்கர்களில், மா மரங்கள் உள்ளன. இங்கு விளையும் மாம்பழங்கள், கேரளா உட்பட பல இடங்களுக்கும் அனுப்பபடுகிறது. தற்போது தேன் பூச்சி தாக்குதல் அதிகரிப்பால், சில மரங்களில் மட்டுமே, மாங்காய் விளைந்துள்ளது. மாங்காய்களில் கருப்பு நிற புள்ளிகள் உள்ளன. இதனால் விலையின்றி,விவசாயிகள் பாதிக்கின்றனர்.விவசாயி கந்தையா,""கோடைகாய் சில மரங்களில் தான் காய்க்கும். தேன் பூச்சி தாக்குதலால், இலைகள் காய்ந்து, காய்களில் கருப்பு நிறம் படிந்து இருக்கும். கிலோ 40 ரூபாய் விலை போகும் மாங்காய்,நோய் தாக்குதலால் 10 ரூபாய்க்கு விற்கும் நிலை உள்ளது ," என்றார்.

## மின் தடையால் ரோஜா உற்பத்தி , ஏற்றுமதி பாதிப்பு

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வறட்சி, மின் தடையால் ரோஜா விவசாயிகள், மலர் சாகுபடியை கைவிட்டு வருகின்றனர். இதனால், வரும் புத்தாண்டு மற்றும் காதலர் தினத்திற்காக, வெளிநாடுகளுக்கு ரோஜா ஏற்றுமதி செய்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர், தேன்கனிக்கோட்டை, பாகலூர், பேரிகை, உத்தனப்பள்ளி, தளி, பேளகொண்டப்பள்ளி உள்ளிட்ட சுற்றுவட்டாரப் பகுதிகளில் இருந்து, ஆண்டுதோறும், 5 ஆயிரம் ஏக்கரில் விவசாயிகள், திறந்த வெளியில் பட்டன் ரோஜா சாகுபடி செய்து வருகின்றனர்.

பசுமை குடில் :இத்துடன், பசுமை குடில் (கிரீன்ஹவுஸ்) முறையில், ஏற்றுமதிக்கான உயர் ரக ரோஜா சாகுபடியும் மேற்கொள்ளப்படுகிறது.பசுமை குடில் முறையில், ஒரு ஏக்கர் ரோஜா சாகுபடிக்கு, 30 லட்ச ரூபாய் செலவாகிறது. அரசு மானியம், 13 லட்ச ரூபாய் போக, மீதி வங்கிக் கடனாக பெறப்படுகிறது.இங்கு உற்பத்தியாகும் ரோஜா மலர்கள், உள்நாடு மற்றும் அயல்நாடுகளில் விற்பனை செய்யப்

படுகின்றன.ரோஜா சாகுபடி, ஆழ்துளை கிணறுகளை நம்பியே, சொட்டு நீர் பாசனத்தின் வாயிலாக நடக்கிறது. உரங்கள் மற்றும் மருந்துகளை நேரடியாக செடிகளுக்கு தெளிக்காமல் தண்ணீரில் கரைத்து, சொட்டு நீர் குழாய்கள் வழியாக வழங்குவர்.தற்போது, ஓசூர் தாலுகாவில் தினம், 18 மணி நேரம் மின்தடையாலும், ஆழ் துளை கிணறுகள் வறண்டு காணப்படுவதாலும், ரோஜா செடிகளுக்கு உரிய நேரத்தில் நீர் பாசனம், மருந்துகளை வழங்க முடியாத நிலை உள்ளது.

வங்கி கடன்:இதனால், விரக்தியடைந்த விவசாயிகள், மூன்று மாதமாக ரோஜா சாகுபடியில் ஆர்வம் காட்டவில்லை. வங்கி கடனை அடைக்க வழி தெரியாத விவசாயிகள், பசுமை குடில்களை அகற்றி விற்பனை செய்து வருகின்றனர்.

பேரிகை குடிசெட்லுவை சேர்ந்த ரோஜா விவசாயி சிவா கூறியதாவது:தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டம், இலவச திட்டங்களால் பூக்களை பறிக்க தொழிலாளர்கள்

கிடைப்பதில்லை. வறட்சியை விட, மின்தடை பெரிய பிரச்னையாக உள்ளது. இதனால், செடிகளுக்கு உரிய நேரத்தில் தண்ணீர் மற்றும் மருந்து தெளிக்க முடியவில்லை.நோய் தாக்குதல்:பராமரிப்பு, நீர் பாசனம் இல்லாததால் தரமான பூக்கள் கிடைப்பதில்லை.
மொட்டுகள் விரியாமல் கீழே உதிர்ந்து விடுகின்றன. மருந்து அடிக்காமல் நோய் தாக்குதலும் அதிகரித்து உள்ளது.ஜெனரேட்டர் வைத்து ரோஜா சாகுபடி செய்தால், உற்பத்தி செலவினத்திற்கு ஏற்ற விலை கிடைக்காத நிலை உள்ளது. சரி, இந்தாண்டை விட்டு விட்டு, அடுத்த ஆண்டு பார்த்துக் கொள்ளலாம் என, செடிகளை பராமரிக்க நினைத்தால், வங்கிகள் கடனை கட்டச் சொல்லி நிர்பந்தம் செய்கின்றன.இதனால், 6.50 லட்சம் ரூபாய் மதிப்புள்ள பசுமை குடில்களை, 1.50 லட்சம் ரூபாய்க்கு விற்று கடனை அடைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.
தலைமறைவாகும் ரோஜா விவசாயிகள்:பேரிகை, பாகலூர் பகுதியில், 40 பசுமை குடில்களில், சாகுபடி செய்யாமல் விவசாயிகள் காலியாக விட்டுள்ளனர். பசுமை குடில்களை பொறுத்தவரை, மூன்று ஆண்டுக்கு ஒரு முறை மாற்ற வேண்டும். ஆனால், அதை மாற்ற, 1.50 லட்சம் ரூபாய் செலவாகும். அப்படி செலவு செய்ய தற்போது விவசாயிகளிடம் பணம் இல்லை. வறட்சி நிலவுகிறது.
மின்தடை பிரச்னையும் இப்போதைக்கு தீர்வதாக இல்லை.அதனால், இழப்பை சமாளிக்க, பசுமை குடில்களை விவசாயிகள் விற்பனை செய்கின்றனர். மேலும் பலர், வங்கி கடன், கந்து வட்டி கடனுக்கு பயந்து தலைமறைவாகி வருகின்றனர்.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்


10.12.2012 A.M

**3 நாளுக்கு பின் காவிரி நீர் மேட்டூர் வந்தது**



மேட்டூர்: கர்நாடக அணையில் இருந்து திறந்து விடப்பட்ட காவிரி நீர் 3 நாளுக்கு பின் மேட்டூர் அணையை நேற்று நண்பகல் வந்தடைந்தது. உச்சநீதிமன்ற உத்தரவுக்கு பணிந்து கிருஷ்ண ராஜ சாகர் அணையில் இருந்து, 6ம் தேதி நள்ளிரவு திடீரென தண்ணீர் திறக்கப்பட்டது. அந்த நீர் மறுநாள் தமிழகத்திற்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் காலதாமதம் ஏற்பட்டது. ஆற்றில் பல இடங்கள் வறண்டு கிடந்ததால் ஆங்காங்கே உள்ள பள்ளங்களிலும் தண்ணீர் நிரம்பியது. இதனால், தாமதம் ஏற்பட்டு நேற்று முன்தினம் மாலை 6.15 மணியளவில் பிலிகுண்டுலுவுக்கு காவிரி நீர் வந்து சேர்ந்தது. அங்கிருந்து மேட்டூர் அணையை நீர் வந்தடைவதிலும் தாமதம் ஏற்பட்டது. வழக்கமாக பிலிகுண்டுலுவில் இருந்து 60 கி.மீ., தூரம் உள்ள மேட்டூர் அணைக்கு தண்ணீர் வந்து சேர 10 மணி நேரமாகும். ஆனால், நேற்று காலை 8 மணி வரை 14 மணி நேரமாகியும் நீர் வந்து சேரவில்லை. அப்போது, அணையின் நீர் மட்டம் 47.85 அடியாக இருந்தது. இந்நிலையில், நேற்று நண்பகல் நேரத்தில் கர்நாடகம் திறந்து விட்ட காவிரி நீர் மேட்டூர் அணையை வந்தடைந்தது. நேற்று அதிகாலை வரை ஒகேனக்கல் காவிரி ஆற்றில் வினாடிக்கு 10,000 கனஅடியாக இருந்த நீர்வரத்து, நண்பகல் நேரத்தில் வினாடிக்கு 11,500 கனஅடியாக அதிகரித்தது.

**சின்னவெங்காயம்  கிடுகிடு  கிலோ  ரூ .60ஆக உயர்ந்தது**



கோவை: தமிழகத்தில் கடும் மின் வெட்டு, இரு பருவமழை எதிர்பார்த்த அளவு பெய்யாதது போன்றவற்றால் வெங்காய உற்பத்தி பரப்பரளவுகள் குறைந்துவிட்டன. கிணற்றில் தண்ணீர் இருந்தாலும் 15 மணி நேர மின் வெட்டால் தண்ணீர் பாய்ச்சும் பரப்பளவும் குறைந்து விட்டது. இதனால் சின்ன வெங்காயம் உற்பத்தி பாதியாக  குறைந்து விட்டது. தாராபுரம், பல்லடம், தொண்டாமுத்தூர், ஆலாந்துறை, செம்மேடு, கிணத்துக்கடவு போன்ற பகுதியில் இருந்துதான் கோவை காய்கறி மொத்த மார்க்கெட்டுக்கு சின்ன வெங்காயம் தினமும் 3000 மூட்டைகள் வரும். ஆனால், தற்போது இதன் வரத்து 1000 மூட்டையாக குறைந்து விட்டது. அதுவும் சேமித்து வைக்கப்பட்டு இருந்த வெங்காயம்தான் வரத் துவங்கியுள்ளன. இதனால் சின்னவெங்காயம் விலை உயர்ந்த வண்ணம் உள்ளன. கடந்த ஒரு வாரத்திற்கு முன்பு ஒரு கிலோ ரூ.40க்கு விற்ற சின்ன வெங்காயம் தற்போது மொத்த மார்க்கெட்டில் ரூ.50 ஆக அதிகரித்துள்ளது. சில்லரை விற்பனையில் இது ஸீ60க்குவிற்கப்படுகிறது. ராசிபுரத்தில் இருந்து புதிய வரத்து வருவதற்கு இன்னும் 15 நாட்களுக்கு மேல் ஆகும். று பெல்லாரி வெங்காயம் 6000 மூட்டைகள் மார்க்கெட் டுக்கு வந்தது. தற்போது 3000 மூட்டைகளாக குறைந்து விட்டது. பெல்லாரி மொத்த மார்க்கெட்டில் ரூ.20க்கு விலை போகிறது. இது சில்லரை விற்பனையில்

கோவை: தமிழகத்தில் கடும் மின் வெட்டு, இரு பருவமழை எதிர்பார்த்த அளவு பெய்யாதது போன்றவற்றால் வெங்காய உற்பத்தி பரப்பரளவுகள் குறைந்துவிட்டன. கிணற்றில் தண்ணீர் இருந்தாலும் 15 மணி நேர மின் வெட்டால் தண்ணீர் பாய்ச்சும் பரப்பளவும் குறைந்து விட்டது. இதனால் சின்ன வெங்காயம் உற்பத்தி பாதியாக  குறைந்து விட்டது. தாராபுரம், பல்லடம், தொண்டாமுத்தூர், ஆலாந்துறை, செம்மேடு, கிணத்துக்கடவு போன்ற பகுதியில் இருந்துதான் கோவை காய்கறி மொத்த மார்க்கெட்டுக்கு சின்ன வெங்காயம் தினமும் 3000 மூட்டைகள் வரும். ஆனால், தற்போது இதன் வரத்து 1000 மூட்டையாக குறைந்து விட்டது. அதுவும் சேமித்து வைக்கப்பட்டு இருந்த வெங்காயம்தான் வரத் துவங்கியுள்ளன. இதனால் சின்னவெங்காயம்

விலை உயர்ந்த வண்ணம் உள்ளன. கடந்த ஒரு வாரத்திற்கு முன்பு ஒரு கிலோ ரூ.40க்கு விற்ற சின்ன வெங்காயம் தற்போது மொத்த மார்க்கெட்டில் ரூ.50 ஆக அதிகரித்துள்ளது. சில்லரை விற்பனையில் இது ரூ.60க்குவிற்கப்படுகிறது. ராசிபுரத்தில் இருந்து புதிய வரத்து வருவதற்கு இன்னும் 15 நாட்களுக்கு மேல் ஆகும். று பெல்லாரி வெங்காயம் 6000 மூட்டைகள் மார்க்கெட்டுக்கு வந்தது. தற்போது 3000 மூட்டைகளாக குறைந்து விட்டது. பெல்லாரி மொத்த மார்க்கெட்டில் ரூ.20க்கு விலை போகிறது. இது சில்லரை விற்பனையில் ரூ.24 வரை விற்கப்படுகிறது என காய்கனி மொத்த மார்க்கெட் வியாபாரி எம்.ராஜேந்திரன் தெரிவித்தார்.24 வரை விற்கப்படுகிறது என காய்கனி மொத்த மார்க்கெட் வியாபாரி எம்.ராஜேந்திரன் தெரிவித்தார்.

## நீலகிரி மலைப்பகுதியில் உறை பனி தாக்கத்தால் கருகும் முட்டைகோஸ்



மஞ்சூர்: நீலகிரி மாவட்டம் மஞ்சூர் அருகேயுள்ள பிக்கட்டி, முள்ளிகூர், எமரால்டு, நஞ்சநாடு, அட்டுபாயில், இத்தலார் சுற்றுப்புற பகுதியில் தேயிலை விவசாயத்துடன் பெருமளவு மலை காய்கறி விவசாயம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பகுதியில் விவசாயிகள் தற்போது உருளை கிழங்கு, கேரட், பீட்ரூட் ஆகியவற்றுடன் முட்டைகோசை அதிகளவு பயிரிட்டுள்ளனர். பனியால் நூற்றுக்கணக்கான ஏக்கர் தேயிலை தோட்டங்களில் செடிகள் கருகி விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டது. உறைபனியின் தாக்கத்தில் இருந்து மலை காய்கறி பயிர்களை பாதுகாக்க விவசாயிகள் காலை, மாலை இரு வேளைகளிலும் தங்கள் தோட்டங்களுக்கு நீர் பாய்ச்சி பயிர்களை பாதுகாத்தனர்.கடந்த 10 நாட்களாக இரவு நேரங்களில் உறைபனி கொட்டுகிறது. பகல் நேரத்தில் வெயில் சுட்டெரிக்கிறது. உறைபனியின் தாக்கம் காரணமாக மலை காய்கறி விவசாயமும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக முட்டைகோஸ் பயிர் முற்றிலுமாக கருகி உள்ளன. முட்டைகோசுக்கு போதிய விலை கிடைக்காத நிலையில் பெரும்பாலான விவசாயிகள் விளைந்த முட்டைகோசை அறுவடை செய்யாமல் உள்ளனர். இதனால் பெரும்பாலான தோட்டங்களிலும் முட்டைகோஸ் பனியின் தாக்கத்தில் கருகி

காட்சியளிக்கிறது. பனியை தாங்கி வளரும் தன்மை கொண்ட முட்டைகோஸ் கருகி வருவதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

**கரும்பு விலை நிர்ணயம் மாநில அரசுக்கு அதிகாரம்**



புதுடெல்லி : கரும்பு விலையை நிர்ணயித்தல் மற்றும் ஆலைகளுக்கு கரும்பு ஒதுக்கீடு செய்யும் அதிகாரத்தை மாநில அரசுகளுக்கு அளித்து மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.
விவசாயிகள் உற்பத்தி செய்யும் கரும்புக்கு ஆதார விலையை மத்திய அரசு நிர்ணயிக்கிறது. சில மாநில அரசுகள், இந்த விலையுடன் கூடுதல் விலையை அறிவிக்கின்றன. அதே போல், வெளிச்சந்தைக்கு சர்க்கரை விற்பதற்கு சில கட்டுப்பாடுகளை மத்திய அரசு விதித்துள்ளது. இந்நிலையில், சர்க்கரை மீதான கட்டுப்பாட்டை நீக்குவது உள்ளிட்ட சில பரிந்துரைகளை மத்திய அரசிடம் ரங்கராஜன் கமிட்டி அளித்துள்ளது.

இந்த கமிட்டி அறிக்கையை அரசு ஏற்றால், கரும்பு விவசாயிகள் மிகவும் பாதிக்கப்படுவார்கள் என்று விவசாய சங்கங்கள் போராட்டம் நடத்தி வந்தன. இதையடுத்து, கரும்பு விலையை நிர்ணயிக்கும் அதிகாரத்தை மாநில அரசுகளிடம் மத்திய அரசு விட்டுள்ளது. இது பற்றி, ராஷ்ட்ரீய கிசான் மஸ்தூர் சங்கத்திற்கு மத்திய உணவு விநியோகம் மற்றும் நுகர்வோர் துறை அமைச்சகம் கடிதம் அனுப்பியுள்ளது.

இந்த சங்கத்தின் அமைப்பாளர் வி.எம்.சிங் நேற்று இதை டெல்லியில் தெரிவித்தார். அவர் கூறியதாவது: கரும்புக்கு விலை நிர்ணயம் செய்வது மற்றும் ஆலைகளுக்கு கரும்பு ஒதுக்கீடு செய்யும் அதிகாரத்தை மாநில அரசுகளுக்கு அளித்து மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. இதை வரவேற்கிறோம். இதன்மூலம், கரும்பு விவசாயிகளுக்கு பெரும் இழப்பு ஏற்படுவது தவிர்க்கப்படும்.

**குன்னூர் ஏலத்தில் டீத்தூள் விலை அதிகரிப்பு**



குன்னூர் : குன்னூர் சிடிடிஏ ஏல மையத்தில் தேயிலை தூள் ஏல விற்பனை நடைபெற்றது. மொத்தம் 14.94 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது. இதில் இலை ரகம் 10.69 லட்சம் கிலோவும், டஸ்ட் ரகம் 4.25 லட்சம் கிலோவும் அடங்கும். உள்நாடு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்கள் அதிகளவில் ஆர்வமுடன் பங்கேற்றனர். 84 சதவீத தேயிலை தூள் விற்பனை ஆனது. அனைத்து ரகத்திற்கும் கிலோவுக்கு ரூ.2 வரை விலை உயர்ந்தது.

இலை ரகத்தில் சாதாரண வகை கிலோ ரூ.82 முதல் ரூ. 84, உயர் வகை ரூ. 105 முதல் ரூ. 135, டஸ்ட் ரகத்தில் சாதாரண வகை ரூ. 82 முதல் ரூ. 86, உயர் வகை ரூ. 105 முதல் ரூ. 150 வரை விலை கிடைத்தது. சிடிசி டஸ்ட் ரகத்திற்கு அதிகபட்சமாக ரூ.159, ஆர்தோடக்ஸ் ரகம் ரூ.249 என விலை கிடைத்தது. அடுத்த ஏலத்திற்கு 14.21 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு தயாராக உள்ளது.